செ.வெ.எண்.452/2021 நாள் : 07.10.2021

**திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஜோலார்பேட்டை, நாட்றம்பள்ளி, கந்திலி மற்றும் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியங்களில் பதிவான வாக்குகளை வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள அறைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா. இ.ஆ.ப., அவர்களும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர்.கி.பாலகிருஷ்ணன் அவர்களும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.**

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஜோலார்பேட்டை, நாட்றம்பள்ளி, கந்திலி மற்றும் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியங்களில் பதிவான வாக்குகளை வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள அறைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா. இ.ஆ.ப., அவர்களும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர்.கி.பாலகிருஷ்ணன் அவர்களும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பதிவான வாக்குகளை அக்ராகரம் தொழில்நுட்ப கல்லூரியில் வாக்கு எண்ணும் மையத்தில் வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள அறைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா. இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அதனை தொடர்ந்து நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் பதிவான வாக்குகளை நாட்றம்பள்ளி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வாக்கு எண்ணும் மையத்தில் பதிவான வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள அறைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

பின்னர் கந்திலி ஊராட்சி ஒன்றியத்தில் பதிவான வாக்குகளை கெஜல்நாயக்கன்பட்டிஅரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வாக்கு எண்ணும் மையத்தில் பதிவான வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள அறைகளையும் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பதிவான வாக்குகளை குருசிலாப்பட்டு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வாக்கு எண்ணும் மையத்தில் பதிவான வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள அறைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வுகளில் அடிப்படை வசதிகள் குறித்தும் பாதுகாப்பு குறித்தும், வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள அறைகளை 24 மணிநேரமும் கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைகளில் உள்ள கண்காணிப்பு கேமிரா தொலைகாட்சிகளையும், வாக்கு எண்ணிக்கை அறைகளில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்புகளையும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு செய்தார்கள். மேலும் வாக்கு எண்ணும் மையங்களை பார்வையிட்டதற்கான பதிவேடுகளில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா. இ.ஆ.ப., அவர்களும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர்.கி.பாலகிருஷ்ணன் அவர்களும் கையொப்பமிட்டார்கள்.

இந்த ஆய்வுகளில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர்.கி.பாலகிருஷ்ணன், காவல் துணை கண்காணிப்பாளர்கள் திரு.சுரேஷ் பாண்டியன், திரு.தா.சாந்தலிங்கம், உதவி திட்ட அலுவலர் திருமதி.விஜயகுமாரி, தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.வினாயகம், காவல் ஆய்வாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**